நிலா காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



5


கல்கியின்

# பொன்னியின் செல்வன்


காமிக்ஸ்

நிலா காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம்!
திருக்கோவிலூர் மலையமான் கூறியதை கேட்டீர்கள் அல்லவா! பாட்டன் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும். வாருங்கள், இளவரசர் கடம்பூர் கோட்டை வாசலை நெருங்கிவிட்டார். ஆதித்த கரிகாலருக்கு, கடம்பூர் அரசர் தரும் வரவேற்பைப் பார்க்கலாம் வாருங்கள். மக்கள் திரள், திரளாக கடம்பூரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நாமும் அவர்களுடன் சேர்ந்து கொள்வோம்.


கொம்பு, எக்காளம் போன்ற ஊதும் இசைக் கருவிகள் ஆதித்த கரிகாலனை வரவேற்கும் விதமாக இசைக்கப்படுகின்றன.
க்ளக்
க்ளக்
க்ளக்
தொம்டா
தொம்
பன்னிரெண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்த வீராதி வீரர்! வீர பாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி!


இரட்டை மண்டலத்தார் சொப்பனத்தில் கண்டு அஞ்சும் சிங்கம்! தொண்டை மண்டலாதிபதி! வடதிசை மாதண்ட நாயகர்! மூன்று உலகையும் ஆளும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமகனார்! ஆதித்த கரிகால சோழ மகாராஜா வருகிறார்! பராக்!! பராக்!!
கொல்லி மலை மன்னன் வல்வில் ஓரி - அவனுடைய பரம்பரை வழி வந்த ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, வீர கம்பீர சம்புவரையர். சோழ குலத்திற்கு என்றும் துணைவன், வீர நாராயண ஏரியின் காவலன், ஐயாயிரம் வீரப் படையின் தண்ட நாயகன்....
அரண்மனையில் வசிக்கும் ராணிமார்களும், இளவரசிகளும் மாவீரர் ஆதித்த கரிகாலரை பார்க்க ஆவலாக அரண்மனை மேல் மாடத்தில் வந்து காத்திருக்கிறார்கள்.



மாவீரர் கரிகாலர் வாழ்க!
மாவீரர் கரிகாலர் வாழ்க!
மாவீரர் கரிகாலர் வாழ்க!
மேல் மாடத்திலிருந்த அரசகுலப் பெண்கள் மலர் தூவி பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலரை வரவேற்கின்றனர்.
நான் நினைத்தது போல் வந்துவிட்டீரா! உமக்காக அல்லவா வெகு காலமாக காத்திருக்கிறேன்.
அண்ணன் கந்தமாறனுடனும் இளவரசருடனும் சேர்ந்து அவரும் வந்திருக்கிறாரே!
மகிழ்ச்சியில் மேலும் மலர்களை அள்ளி வருகிறாள் மணிமேகலை.
மணிமேகலை! அதை இப்படி காட்டு.


மணிமேகலை கொண்டு வந்த மலர்களிலிருந்து ஒரு மலரை மட்டும் எடுத்து அதை சரியாக ஆதித்த கரிகாலரின் மேல் படுமாறு வீசுகிறாள் நந்தினி.
அது சரியாக கரிகாலரின் தலையில் பட்டு விழுகிறது.
ஆகா! உன் ஆட்டத்தை தொடங்கிவிட்டாயா?
இளவரசர் நிமிர்ந்து பார்க்க நந்தினியும் அவரைப் பார்க்கிறாள்.
யார் தடுத்தாலும் நீர் வருவீர் என்று எனக்கு தெரியும்.


அதே வேளையில், மணிமேகலை வந்தியத்தேவன் மீது, தான் கொண்டு வந்த மலர்கள் முழுவதையும், அவன் மேல் தூவுகிறாள்.
ஆகா! யார் நம் மேல் இத்தனை கரிசனம் காட்டுவது!
மணிமேகலையா! என்னை மன்னித்துவிடு. மேலும் இவளுடைய ஆசை வளர நாம் காரணமாக இருக்க கூடாது.
நான் வேறொரு பெண்ணுக்கு என் மனதை பறிகொடுத்து விட்டேன் என்பதை எப்படி இவளிடம் எடுத்துக் கூறுவது.
இனியும் நாம் இங்கிருப்பது நல்லதல்ல!
என்று நினைத்து கூட்டத்தோடு கூட்டமாக பதுங்கி விடுகிறான் ஆழ்வார்க்கடியான்.


இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
இளவரசரை நாங்கள் பார்க்க வேண்டும். அவரிடம் பேச வேண்டும்.
இளவரசரிடம் பேச வேண்டும் எங்களை உள்ளே விடுங்கள்.
அவரிடம் எங்கள் குறைகளை கூற வேண்டும். எங்களை உள்ளே விடுங்கள்.
எங்களை உள்ளே விடுங்கள்.
இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
மக்களின் குரல் ஒலியால் கோட்டையே அதிர்கிறது.
மக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் காவலர்கள் கோட்டைக் கதவை சாத்துகிறார்கள்.



கோட்டைக் கதவு சாத்தும்
சத்தம் கேட்டு இளவரசர்
கரிகாலர் திரும்பி பார்க்கிறார்.
என்ன பழுவூர் பாட்டா! என்ன கடம்பூர்
மாமா! என்னையும் சக்கரவர்த்தியை
சிறையில் வைத்தது போல், சிறை
வைக்கப் பார்க்கிறீர்களா?
இதை கேட்டு இருவரும் அதிர்ந்து போகிறார்கள். அதை
பொருட்படுத்தாமல் இளவரசர் இருவரையும் கடந்து செல்கிறார்.
ஹா ஹா...!
என்ன இது?
வந்ததும் வராததுமா
இப்படி பேசிவிட்டு
செல்கிறார் இளவரசர்!
வழியோடு போகிற சனியனை
விலைக்கு வாங்கியது போல்
ஆகிவிட்டதே நம் கதை!
நீர் ஒன்றும்
கவலைப்பட வேண்டாம்.
அவன் நண்பன்
பார்த்திபேந்திரன்,
அவனை கட்டுக்குள்
வைத்திருக்க நமக்கு
உதவியாக இருப்பான்.


நந்தினி கரிகாலன் வருகைக்காகவும், மணிமேகலை வந்தியத்தேவன் வருகைக்காகவும், மேல் மாடத்தில் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.
மணிமேகலை மற்றும் மற்ற தோழிப் பெண்கள் இளவரசரைக் கண்டதும் அங்கிருந்து ஓடிவிடுகிறார்கள்.
என்ன பழுவூர் பாட்டி... நலமா?
பழுவூர் பாட்டி நலம்தான். ஆனால், அர்ச்சகர் வீட்டு பெண்தான் பாவம்!
நீ அர்ச்சகர் வீட்டு பெண் என்பதை இன்னும் என்னை நம்ப சொல்கிறாயா நந்தினி?
என்று கேட்டுக் கொண்டே பெரிய பழுவேட்டரையரையும், சம்புவராயரையும் பார்க்கிறார் கரிகாலர்.


தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந்த இருவரும் இளவரசர் தங்களை பார்க்கிறார் என்பதை உணர்ந்து, இளவரசரை திரும்பிப் பார்க்கிறார்கள்.
எனக்கென்னமோ நிமித்தம் சரியாகப்படவில்லை.
அப்போது கோட்டைக்கு வெளியே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.
இளவரசரை பார்க்க வேண்டும்.
இளவரசரை பார்க்க வேண்டும்.
ஆதித்த கரிகாலர் வாழ்க!
இளவரசரை பார்க்க வேண்டும்.


ஆதித்த கரிகாலர் காவலனிடம்.....
மக்களிடத்தில் அறிவியுங்கள். நான் இன்னும் சில காலம் இங்கு தங்க இருப்பதாகவும், அதே போல் நானும் மக்களை சந்திக்க விரும்புவதாகவும் அறிவியுங்கள்.
துடும்... துடும்...
இதனால் மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால்.



அன்றிரவு நந்தினியும், இளவரசி மணிமேகலையும் ஆடு புலி ஆட்டம் ஆடுகிறார்கள். மணிமேகலை புலியை தனது காய்களாகவும் நந்தினி ஆடுகளை தனது காய்களாகவும் வைத்து ஆடுகிறார்கள்.
நந்தினியை கண்காணிக்க கோட்டானை அனுப்பியிருக்கிறான் ரவிதாசன்.
அதுவும் அவர்களை கண் கொட்டாமல் நோட்டமிடுகிறது.
அக்கா! உங்களை மிகவும் பிடித்துவிட்டது. பெண்கள் பெண்களை திருமணம் செய்து கொள்வதாக இருந்தால், நான் உங்களுக்குத்தான் மாலை சூடுவேன்! (மணிமேகலை)
அப்படி என்னடி கண்டாய் என்னிடம்!?
அது என்னவென்று சொல்லத் தெரியவில்லை. உங்களை பார்த்ததுமே எனக்கு பிடித்து போய்விட்டது.


முதலில் பெரிய பழுவேட்டரையரை தன் வசப்படுத்தியவள், அதன்பின் ஒவ்வொருவராக மதுராந்தக தேவர், கந்தமாறன், பார்த்திபேந்திரன் இப்போது மணிமேகலை இன்னும் யாரையெல்லாம் தன் வசப்படுத்தி என்ன செய்யப் போகிறாளோ!? இந்த நந்தினி.
சோழநாட்டின் வருங்கால மகாராணிக்கு, என்னை பிடிக்கிறது என்றால் அது என் பாக்கியம்தான்!
ஒரு பெண்ணின் மனதை ஒரு பெண் புரிந்து கொள்ள முடியும். ஆனால், ஆண்கள் அதை புரிந்து கொள்ள மாட்டார்கள். வாணர்குலத்து வீரனிடம் உன் மனம் சென்றிருக்கிறது என்பதை கரிகாலர் அறிந்தால் போதும்.
அக்கா! நான் எத்தனை முறை தங்களிடம் சொல்வது. கரிகாலர் மாவீரராய் இருக்கலாம். சோழநாட்டின் சக்கரவர்த்தியாக இருக்கலாம், பேரழகனாகவும் இருக்கலாம். ஆனால் அவரை என்னால் திருமணம் செய்து கொள்ள முடியாது.
உன்னுடையவரின் உடம்பில் தலை இருக்காது.
அக்கா! அவருக்கு ஒன்று என்றால், நான் எதையும் செய்ய தயங்க மாட்டேன்.


ஆடு புலி ஆட்டத்தில் தனது காயை (ஆட்டை) நகர்த்தி...
மணிமேகலை! உன் புலி என்னிடத்தில் சிக்கிக் கொண்டது.
அக்கா! இந்த ஆட்டத்தில் என் மனம் செல்லவில்லை.
இந்த ஆட்டம் உன்னுடையது அல்ல கண்மணி, இது என்னுடைய ஆட்டம்! (நந்தினி)
குழந்தை மனம் கொண்ட மணிமேகலைக்கு, நந்தினியின் வஞ்சகப் பேச்சின் உட்பொருள் விளங்கவில்லை. அப்போது மணிமேகலைக்கு சட்டென்று ஒரு யோசனை வந்தது.
அக்கா! என் அண்ணன் கந்தமாறன் தாங்கள் இட்ட கோட்டை தாண்டமாட்டான். நீங்கள் அவனிடம் பேசி அவர்கள் இருவருக்கும் (கந்தமாறனுக்கும் - வந்தியத்தேவனுக்கும்) உள்ள விரோதத்தை போக்கிவிடலாம் அல்லவா?


அடி பெண்ணே! நான் எந்த நோக்கத்தோடு இங்கே வந்தேனோ அதற்கு விரோதமாக என்னை செய்ய சொல்கிறாய். நீ வெகு கெட்டிக்காரிதான்.
நீ சொல்றபடி வேண்டுமானால் உன் அண்ணனை சரி கட்டிவிடலாம். கரிகாலரையும் கூட இதிலிருந்து விலகிவிட செய்ய முடியும். ஆனால், அவன் (வந்தியத்தேவன்) மனதில் நீ இருக்கிறாய் என்பது என்ன நிச்சயம்?
அந்த காஞ்சிபுரத்து வாலிபனின் மனதில் நீ இருக்கிறாய் என்பது என்ன நிச்சயம்? (நந்)



மறுநாள் காலை விசாலமான அறையில் பெரிய பழுவேட்டரையர், சம்புவரையர் உடன் கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் கூடி பேசி கொண்டிருக்கிறார்கள். அங்கு ஆதித்த கரிகாலனும், வந்தியத்தேவனும் வருகின்றனர்.
பழுவூர் பாட்டா! கடம்பூர் மாமா!
தாங்கள் இங்குதான் இருக்கிறீர்களா? உங்களை தேடித்தான் வந்தேன்.
உங்களிடம் முக்கியமான ஒன்று கேட்க வேண்டும்.
பாட்டா! நான்கு மாதங்களுக்கு முன் கடம்பூர் மாளிகையில் உங்கள் தலைமையில் ஏதோ கூட்டம் நடந்ததாக கேள்விப்பட்டேன். அதற்கு பல சிற்றரசர்களை அழைத்திருக்கிறீர்கள். அந்த விருந்துக்கு என்னை ஏன் அழைக்கவில்லை? என் பாட்டன் மலையமானை ஏன் அழைக்கவில்லை?


அது... அது வந்து...!
இளவரசே! இந்த ராஜ்யத்தில் கண்டராதித்தர் புதல்வர் மதுராந்தகருக்கு பாத்தியம் இருக்கிறது அல்லவா!
யார் இல்லை என்று கூறினார்கள்!
என் தந்தை எனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடத்தியபோது, நீங்கள் எல்லோரும் அதில் கலந்து கொண்டீர்கள் அல்லவா?
அப்போது ஏன் மதுராந்தகதேவரின் உரிமையைக் கோரவில்லை? அப்போது எங்கு சென்றிருந்தார் என் சிற்றப்பன்?
இப்போது மதுராந்தகனுக்கு உங்கள் தம்பி மகளை கொடுத்திருப்பதால் மதுராந்தகனின் உரிமையைக் கோருகிறீர்களா? பாட்டா!


சோழ ராஜ்யம் இப்போது முன்னை போல் இரண்டு வெள்ளாறுகளுக்கு மத்தியில் குறுகிக் கிடக்கவில்லை! குமரி முனையிலிருந்து கிருஷ்ணா நதி வரையில் பரவிப் படர்ந்திருக்கிறது.
கொள்ளிட நதிக்கு தெற்கு உள்ள ராஜ்யத்தை மதுராந்தகத் தேவருக்கும் வடக்கேயுள்ள பகுதியை தாங்களுக்கும் என்றும்.....
இராஜ்யத்தை பிரிப்பதில் எனக்கு சிறிதும் விருப்பமில்லை.
வழிவழியாக வந்த இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான். தாலி கட்டிய மனைவியைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்! கிழவர்களாகிய உங்களுக்கு அது சம்மதமாயிருக்கலாம்! எனக்கு சம்மதம் இல்லை! (கரிகாலர்)


மேல் மாடத்திலிருந்து நந்தினியும், மணிமேகலையும் இவர்களுக்குள் நடக்கும் போராட்டத்தை பார்க்கிறார்கள். கரிகாலனின் பேச்சு நந்தினிக்கு கோபத்தை உண்டாக்க, அங்கிருந்து அவள் சென்று விடுகிறாள்.
கரிகாலன் பேசியதை கேட்டு கோபமடைந்து பழுவேட்டரையரின் கை தானாகவே உறை வாளுக்கு செல்கிறது.
பாட்டா! என்ன இதற்குள் எழுந்து போக பார்க்கிறீர்கள்? என்னுடைய யோசனையை முழுவதும் கேட்டுவிட்டு போங்கள்.
இவனுடைய போக்கே சரியாக இல்லை. சின்னவங்க, பெரியவங்க என்றும் பாராமல் அதிகபிரசங்கியாக இருக்கிறான் ! இந்த வார்த்தையை வேறொருவர் பேசியிருந்தால் அவன் தலை இந்நேரம் தரையில் உருண்டிருக்கும்!
நீங்களும் உங்கள் முன்னோர்களும் ஐந்து தலைமுறையாக பாடுபட்டு, எத்தனையோ வீராதி வீரர்களின் உயிர்களை பலி கொடுத்துச் சோழ இராஜ்யம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இதை இரண்டாக பிரித்து சிறிய பகுதிகளாக்குவது பாவமாகும். (கரிகாலர்)


அந்த யோசனையை விட்டு விடுங்கள். இந்த பெரிய சோழ இராஜ்யம் முழுவதையும்........
மதுராந்தகனுக்கே விட்டுக் கொடுத்துவிட நான் ஆயத்தமாயிருக்கிறேன்.
!
ஒரு நொடிப் பொழுதில் இவ்வளவு பெரிய இராஜ்யத்தை இழக்க துணிந்துவிட்டாரே கரிகாலர்! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது சரியாகத்தான் இருக்கிறது!
ஆனால், ஒரு நிபந்தனை!
எனக்கு வட திசை மீது படையெடுத்துச் செல்ல மூன்று லட்சம் போர் வீரர்கள் கொண்ட சைன்யம் வேண்டும்.


அந்த மாபெரும் சைன்யத்துக்கு வேண்டிய தளவாட சாமான்களும், சாமக்கிரியைகளும், ஒரு வருஷத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் வேண்டும். அது போதும்! (கரிகாலர்)
என்னுடைய வாள் வலி கொண்டும் எனக்கு துணை வரும் வீரர்களின் தோள் வலி கொண்டும், கிருஷ்ணா நதிக்கு வடக்கே நானாக கைப்பற்றும் நாடுகளுக்கு சக்கரவர்த்தி ஆவேன்! அப்படி இல்லையென்றால் சோழ குலத்தின் வீரப் புகழை நிலை நாட்டினோம் என்ற மகிழ்ச்சியுடன் வீர சொர்க்கம் அடைவேன்!
அதற்கு தாங்கள் முதலில் தஞ்சை சென்று, மதுராந்தகத் தேவனை இங்கே அழைத்து வாருங்கள்.
நாம நினைச்சது ஒன்னு, நடக்கிறது ஒன்னாயில்ல இருக்கு. இளவரசரை நம்ம அரண்மனைக்கு அழைச்சதே மணிமேகலையை திருமணம் செய்து வைக்கலாம் என்றுதானே! இளவரசர் என்னடானா இந்த இராஜ்யமே வேண்டாமுன்னு சொல்றாரே!
இவன் பேச்சை எந்த அளவுக்கு நம்புவது? மதுராந்தகனை இங்கே வரவழைத்த பிறகு, ஏதேனும் விபரீத காரியம் செய்ய உத்தேசித்திருந்தால்!


என்ன பழுவூர் பாட்டா! கடம்பூர் மாமா! சம்மதமா?
என்ன சொல்வதென்று ஒன்றும் புரியாமல் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.
என்ன பாட்டா! உங்கள் விருப்பப்படி, உங்கள் தர்மப்படி மதுராந்தகனுக்காக இந்த இராஜ்யத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டேன். பிறகு எதற்கு இந்த யோசனை? (கரிகாலர்)
இளவரசே! தங்களுடைய நிபந்தனையை ஒப்புக்கொள்ள நாங்கள் யார்? எங்களுக்கு என்ன உரிமை இருக்கு? சக்கரவர்த்தியை அல்லவா கேட்க வேண்டும்!
பாட்டா! சக்கரவர்த்தியின் பெயரைச் சொல்லி யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கிறீர்கள்? என்னை ஏமாற்ற முடியாது. எனக்கு தெரியாது என்றா எண்ணினீர்கள்? (கரிகாலர்)


சின்ன பழுவேட்டரையர் அனுமதியின்றி யாராவது என் தந்தையை பார்க்க முடியுமா?
ஈழத்திலிருந்து என் தம்பியை சிறைபடுத்திக் கொண்டு வருவதற்கு, சக்கரவர்த்தி கட்டளை போட்டது தன் சொந்த விருப்பத்தினாலா?
ஒன்று தெரியுமா? தாங்கள்தான் அருள்மொழியை கடலில் மூழ்கடித்துக் கொன்றுவிட்டதாக, பலர் தாங்கள் பேரில் ஆத்திரப்பட்டு கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.
இளவரசே! அத்தகைய அபாண்டமான பழியை சொன்னது யார்? கூறுங்கள். சொன்னவனுடைய நாவைத் துண்டித்து, அவனையும் கண்டதுண்டமாக வெட்டிப் போடுகிறேன்!
பழி சொல்கிறவர்களை எல்லாம் கண்டதுண்டமாக வெட்டுவதாக இருந்தால், இந்த சோழ நாடே சுடுகாடாகிவிடும். வேண்டுமானால் சிவபக்தனாகிய மதுராந்தகன் ஆட்சி புரிவதற்கு சோழ நாடு தகுந்த இராஜ்யமாக இருக்கலாம்!


பாட்டா! நான் அதை நம்பவில்லை. சோழ குலத்துக்கு பரம்பரை தலைவர்களான நீங்கள் அத்தகைய படுபாதகத்தை ஒரு நாளும் செய்திருக்க மாட்டீர்கள்.
அது ஒரு வேளை பாண்டிய நாட்டு மந்திரவாதிகளின் காரியமாயிருக்கலாம்! ஆகையால் அருள்மொழியின் கதிக்கு நீங்கள் பொறுப்பாளி இல்லை. ஆனால், சக்கரவர்த்தியை கேட்டுச் சொல்ல வேண்டும் என்று மட்டும் இனி என்னிடம் சொல்லாதீர்கள். வேண்டுமானால் பழுவூர் பாட்டி இளையராணி நந்தினி தேவியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லுங்கள்.
இளவரசர் கூறியதைக் கேட்டு பழுவேட்டரையருக்கு கோபம் தலைக்கேறியது. ஹூம்...
ஆறு தலைமுறையா சோழ குலத்துக்கு உண்மையா உழைச்சதற்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்!


கரிகாலன் கூறியதைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சி அடைகிறார்கள்...!


ஐயா! தாங்கள் எங்கள் வீட்டு விருந்தாளியை...
என்று தடுமாற்றத்துடன் குளறினான் கந்தமாறன்.


என்ன கந்தமாறா! இது உங்கள் வீடா? மறந்துவிட்டேன்!
கொல்லி மலை வல்வில் ஓரியின் வம்சத்தில் பிறந்த வீராதி வீரன் அல்லவா நீ? அதுவும் நீ இருக்கும் இடத்தில் பயந்து பேச வேண்டும்.
ம்...
சம்புவரையர் தன் மகன் கந்தமாறனுக்கு கண் ஜாடையில் அமைதியாக இருக்கும்படி உணர்த்துகிறார்.
அப்படி தவறாக என்ன சொல்லிவிட்டேன்? பாட்டா! நீங்கள் என் பாட்டன் முறை ஆகையால் இளையராணி எனக்கு பாட்டிதானே? அப்படி நான் அழைப்பதில் என் பாட்டிக்கும் வருத்தமில்லை. தங்களுக்கும் வருத்தமில்லை. இந்த சிறு பிள்ளைகளுக்கு ஏதற்காக ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது? (கரிகாலர்)
பழுவேட்டரையர் தன் கோபத்தை கட்டுப்படுத்துவதைக் கண்டு...


பாட்டா! இளங்காளைகள் அப்படித்தான் துள்ளிக் குதித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்.
ஆங்! நான் ஆரம்பித்த விஷயத்தை விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டேன்.
என் தந்தை சக்கரவர்த்தியின் பேரில் தாங்கள் பாரத்தை சுமத்த வேண்டாம். தாங்கள் சம்மதித்தால் என் தந்தையும் சம்மதித்தார் போலதான்!
பழுவேட்டரையர் சிறிது யோசித்துவிட்டு...
கோமகனே! தாங்கள் அதிசயமான விருப்பத்துக்கு நான் சம்மதித்தாலும் மதுராந்தகத் தேவரின் சம்மதம் எப்படியும் வேண்டுமல்லவா?
அப்போது அதற்கு பதிலேதும் கூறாமல் தலை அசைக்கிறார் ஆதித்த கரிகாலர்.
அது மட்டுமில்லாமல் சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொள்ளாமல் படையெடுப்புக்கு தாங்கள் புறப்பட முடியுமா?


அது மட்டும் முடியாது பாட்டா! அங்கே என் அன்னையும், என் சகோதரி இளைய பிராட்டி குந்தவையும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முடிதுறந்து தேசாந்தரம் செல்வது சம்மதமாயிருக்காது. அவர்கள் பேச்சை நான் மீறுவதும் கஷ்டம்.
தாங்கள் உடனே சென்று மதுராந்தகத் தேவனை இங்கே அழைத்து வாருங்கள். இந்த விஷயம் இந்த கடம்பூர் மாளிகையில்தான் முடிவாக வேண்டும்.


முதலில் மதுராந்தகனை இங்கு அழைத்து வாருங்கள். கூடி பேசி முடிவு செய்து விடுவோம்!
மதுராந்தகனுக்கு பட்டம் கட்டிய பின் நான் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் என் பெற்றோர்களை இருக்கச் செய்துவிட்டு, அப்படியே அவர்களிடம் ஆசி பெற்று நான் புறப்படுகிறேன்.


என்று கூற பழுவேட்டரையர் சிந்தனையில் ஆழ்கிறார்.
ம்... நாம் இருக்கும் போது நம்மை மீறி அப்படி என்ன செய்துவிட முடியும்! அதையும்தான் பார்த்து விடுவோம்!